## டிசம்பர் – 20 – வியாழன்

**புனித பீட்டர் யூலியன்**

**மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை: திபா. 24:1**

------------------------------------------------------------------

### முதல் வாசகம் : ஏசாயா 7 : 10 - 14

ஆண்டவர் ஆகாசுக்கு மீண்டும் தம் திருவாக்கை அருளிச் சொல்லியது. "உம் கடவுளாகிய ஆண்டவர் உமக்கு ஓர் அடையாளத்தை அருளுமாறு கேளும் அது கீழே பாதாளத்திலோ, மேலே வானத்திலோ தோன்றுமாறு கேட்டுக்கொள்ளும்" என்றார். அதற்கு ஆகாசு, "நான் கேட்கமாட்.டேன். ஆண்டவரைச் சோதிக்க மாட்டேன்" என்றார். அதற்கு எசாயா "தாவீதின் குடும்பத்தாரே! நான்சொல்வதைக் கேளுங்கள் மனிதரின் பொறுமையைச் சோதித்து மனம் சலிப்படையச் செய்தது போதாதோ? என் கடவுளின் பொறுமையைக்கூட சோதிக்கப் பார்க்கிறீர்களோ? ஆதலால் ஆண்டவர்தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருள்வார். இதோ, கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார் அக்குழந்தைக்கு அவள் "இம்மானுவேல்" என்று பெயரிடுவார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் எழுந்தருள்வார். மாட்சிமிகு மன்னர் இவரே

### நற்செய்தி : லூக்கா 1 : 26 – 38

ஆறாம் மாதத்தில் கபிரியேல் என்னும் வானதூதரைக் கடவுள் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு கன்னியிடம் அனுப்பினார். அவர் தாவீது குடும்பத்தினராகிய யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவருக்கு மண ஒப்பந்த மானவர். அவர் பெயர் மரியா. வானதூதர் மரியாவுக்குத் தோன்றி, "அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்" என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்டு அவர் கலங்கி, இந்த வாழ்த்து எத்தகையதோ என்று எண்ணிக் கொண்டிருந்தார். வானதூதர் அவரைப் பார்த்து, "மரியா, அஞ்சவேண்டாம் கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர் அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் பெரியவராயிருப்பார் உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது" என்றார். அதற்கு மரியா வானதூதரிடம், "இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே!" என்றார். வானதூதர் அவரிடம், "தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும். உம் உறவினராகிய எலிசபெத்தும் தம் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்திருக்கிறார். கருவுற இயலாதவர் என்று சொல்லப்பட்ட அவருக்கு இது ஆறாம் மாதம். ஏனெனில், கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை" என்றார். பின்னர் மரியா, "நான் ஆண்டவரின் அடிமை உம்சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்றார். அப்பொழுது வானதூதர் அவரை விட்டு அகன்றார்.

**தியானம்:** இன்றைய தியான வாசகங்கள் கிறிஸ்துவின் வருகைக்காக தயார்படுத்தும் காலத்தில் கிறிஸ்துவின் பிறப்பைப்பற்றியும், அதில் முக்கிய பங்காக வகிக்கும் அன்னை மரியாளைப்பற்றியும் அவர் எப்படிப்பட்டவர், எவ்வாறு வாழ்ந்தார் என்று சிந்தித்து வாழவும் அழைத்து நிற்கிறது. அன்று அன்னை மரியாள் இறைவார்த்தையை வாசித்து, தியானித்து அதன்படி வாழ்ந்து வந்தார் அதனால்தான் அக்காலங்களின் பல பெண்கள் இருந்தாலும்கூட கன்னிப் பெண் மரியாவின் வயிற்றில் கிறிஸ்து இயேசு உருவாக சிந்தங்கொண்டு பரோலகதந்தை தூய ஆவியானவரை அனுப்பிவைத்தார். நான் கன்னி ஆயிற்றே கணவனை அறியேன் என்று கூறியவள், கடவுளின் சித்தம் அதுவென அறிந்து "இதோ ஆண்டவரின் அடிமை" என்று தன்னைத் தாழ்த்தியவராய் முழுமனதுடன் ஏற்றுக் கொள்கின்றார். இதைத்தான் அன்று எசாயா இறைவாக்கினர் கூட தாவீதின் குடும்பத்தாரே கேளுங்கள் "கன்னி கருவுற்று ஒரு ஆண்மகனைப் பெற்றெடுப்பார் அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவார்" (எசா.7:4) என்று ஏற்கனவே அறிவித்திருக்கிறார். இம்மானுவேல் என்றால் கடவுள் நம்மோடு என்று பொருள். இன்று நாங்கள் ஆண்டவர் எப்பொழுதும் எங்களோடு இருக்கிறார் அவரே எங்களை வழிநடத்துகிறார் என்று நம்புகிறோமா? ஏற்றுக்கொள்கிறோமா? எம்மை மீட்டெடுக்க தனது மகனை உலகிற்கு அனுப்பினார் என்று அவருக்கு நன்றி சொல்கின்றோமா? அல்லது அன்னை மரியாள் வாழ்ந்த வாழ்க்கை போன்று நாங்கள் வாழ்கின்றோமா? என்று சிந்திக்கவேண்டியவர்களக உள்ளோம். காரணம் நாங்கள் வாழும் வாழ்க்கை இருள் சூழ்ந்த வாழ்க்கையாக, பாவப்பட்ட வாழக்கையாக இருக்கின்றது. இஸ்ராயேல் மக்களுக்கு முன் மேகத்தூணாக, நெருப்பாக ஒளிகொடுத்து வழிநடத்திய இறைவன் அதேபோன்று எங்களையும் வழிநடத்துவார் என்பதை ஏற்றுக் கொண்டவர்களாக அன்று அன்னை மரியாள் எவ்வாறு இறைவார்த்தையை வாசித்து தியானித்து அதன்படி வாழ்ந்தாளோ அதே போன்று நாங்களும் ஒரே குடும்பமாக இறைவார்த்தையை வாசித்து, தியானித்து, அதன்படி வாழ்ந்து வழிகாட்டும் ஒளியாகிய இயேசுவை எம் உள்ளத்தில் ஏற்றுக்கொள்ள எங்களைத் தயார்படுத்துவோம்.